IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 56/2016

P.W.1 - சந்திர சேகரன், த/பெ. ஜெயராமன்

DATE - 13.06.2024

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1 ஆம் பிரதிவாதி நிறுவனத்தின் பங்குகள் எதையும் நான் வாங்கவில்லை எனது பணத்தை தான் முதலீடு செய்துள்ளேன். 1 ஆம் பிரதிவாதியின் லாப நஷ்ட கணக்குகளை நான் பார்த்தில்லை. அவர்கள் காட்டாததால் நான் பார்த்தில்லை. லாபத்தில் இருந்து தான் அவர்கள் நான் செய்து முதலீடிற்கு எனக்கு டிவிடண்ட் வழங்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.16 மற்றும் 18 ல் எத்தனை சதவீதம் டிவிடண்ட் என்று குறிபிடபடவில்லை என்றால் சரிதான். 12.10.2015 அன்று 1 ஆம் பிரதிவாதியிடம் ரூ.10,00,000/- வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அதே தினத்தில் ரூ. 25,000/-மற்றொரு ரூ.25,000/- வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி அவரது எதிர் வழக்குரை மற்றும் கூடுதல் எதிர் வழக்குரையில் எனக்கு கொடுத்தாக கூறியுள்ள தொகைகள் அனைத்தையும் நான் பெற்றுக் கொண்டு விட்டேன் என்றால் சரிதான். எனவே எனக்கு கொடுக்க வேண்டிய அனைத்து தொகைகளும் கொடுத்தாகி விட்டது என்றாலும் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.16 மற்றும் 18 ன் அடிப்படையில் நானாக கற்பனையாக 5 சதவீதம் மற்றும் 2.5 சதவீதம் என்று கணக்கிட்டு தாக்கல்

செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 முதல் 14 வரையுள்ள கிரைய ஆவணங்கள் 1 ஆம் பிரதிவாதிக்கு சம்மந்தமில்லாதவை என்றால் 1 ஆம் பிரதிவாதி நிறுவனத்திற்காக மூன்றாம் ஆம் தரப்பினர் பெயரில் அந்த கிரைய பத்திரங்கள் பெறப்பட்டுள்ளன. எனது பிராதில் உள்ள சங்கதிகளும் எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளும் முரண்படுகின்றன என்றால் சரியல்ல. இந்த வழக்கு முழுமையாக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

S ABDUL MALIK

Digitally signed by S ABDUL MALIK